Registered as a News Paper பக்கங்கள் 06 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 08 திருவள்ளுவர் ஆண்டு 2024 தை 21 (03-02-1993) புதன்கிழமை ஒசை 851

## பயண அனுமதி அட்டை கால எல்லை நீடிப்பு

கிளாலிப் படகுச்சேவைகள் இடைநிறுத்தப்பட்ட தை மாதம் 20 ஆம் திகதியில் இருந்து மீண்டும் படகுச் சேவைகள் ஆரம்பிக்கப்பட இருக்கும் திகதி வரை பயணம் செய்வதற்கான கால எல்லை முடிவடையும் தற்காலிக, அவசர புதுப்பித்தல் பயண அனுமதி அட்டைகளை வைத்திருக்கும் பயணிகள், மீண்டும் கிளாலிப் படகுச் சேவைகள் ஆரம்பிக்கும் திகதியில் இருந்து பதினைந்து (15) நாட்களிற்குள் மேற்படி காலாவதியான பயண

(5 ஆம் பக்கம் பார்க்க)

# மாதகலில் திடீர் தாக்குதல்

# 10 ராணுவம் பலி; பலர் படுகாயம்

## 5 சிப்பாய்களின் சடலங்களை புலிகள் கைப்பற்றினர்

(யாழ்ப்பாணம்)

மாதகல் கடற்கரை வீதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட திடீர் தாக்குதல் ஒன்றில் உயர் அதிகாரி உட்பட பத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயங்களுடன் தப்பி ஓடிவிட்டனர், பதினைந்து நிமிடங்கள் வரை நடைபெற்ற இம் மோதலை அடுத்து அவ்விடத்தில் ஐந்து இராணுவத்தினரின் சடலங்களும், பல ஆயுதங்களும், இராணுவ உபகரணங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன,

இம் மோதலில் ஆறு விடுதலைப் புலிகள் வீரச்சாவடைந்தனர்

நேற்றுக்காலை 6.50 மணியளவில் யாழ்ப்பாணம் - மாதகல் கடற்கரை வீதியால் வீதித்தடைகளை அகற்ற 600 யார் தூரம் முன்னேறி வந்த 30க்கு மேற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் மீதே இத் திடீர்த்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இவர்களுக்கு உதவிக்குவந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீதும் விடுதலைப் புலிகளால் மோட்டார் ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டது இத்தாக்குதலில் ஏற்பட்ட சேத விபரம் தெரியவரவில்லை.

## ஆறு புலிகள் வீரச்சாவு

மாதகலில் நேற்றுக்காலை சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட திடீர்த்தாக்குதலின் போது ஆறு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

கப்டன் செழியன் / பாரதி (செபஸ்ரியாம்பிள்ளை மனோகரன், பனங்கட்டிக்கொட்டில், மன்னார்),

லெப்டினன்ட் நெடுமாறன் / சாந்தன் (வேலாயுதம் பிறேம்குமார், சாரதா வீதி, திருக்கோணமலை),

லெப்டினன்ட் தேனமுதன் / காளிதாஸ் (மணிராசா யோகிதராசா, 1-ம் குறிச்சி, பி.சி வீதி, தம்பிலுவில், அம்பாறை)

லெப்டினன்ட் இறைஞன் / சுலைச்சன் (அன்ரனி கணேஸ், ஆரையம்பதி, 2-ம் குறிச்சி, மட்டக்களப்பு),

2-ம் லெப்டினன்ட் மதிச்செல்வன் / லெனின் (சண்முகலிங்கம் நிமலேஸ்வரன், பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்),

2-ம் லெப்டினன்ட் தங்கவேல் / ராமு (முருகேசு தனபாலசிங்கம், சீனியர் லேன், கலட்டி அம்மன் கோயிலடி, யாழ்ப்பாணம்).

இவர்களுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

மாதகலில் நேற்று சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ★ | ஏ. கே. எல். எம். ஜி | 02 |
| ★ | ரி-56- 2 ரக துப்பாக்கிகள் | 05 |
| ★ | ரி-56 - 1 ரக துப்பாக்கி | 01 |
| ★ | ரி-81 - 1 ரக துப்பாக்கிகள் | 02 |
| ★ | ஏ.கே எல் எம்.ஜி.ரம் மகசின் | 02 |
| ★ | ரி-56 மகசின் | 21 |
| ★ | ரி-81 மகசின் | 06 |
| ★ | ஏ.கே எல்.எம்.ஜி ஹோல்சர் | 04 |
| ★ | மோபைல் செற் | 01 |
| ★ | மோபைல் செற் பற்றி | 01 |
| ★ | பைனாகுலர் | 01 |
| ★ | ஜே ஆர். கைக்குண்டு சிறிது | 04 |
| ★ | ஜே ஆர். கைக்குண்டு பெரிது | 05 |
| ★ | ஏ.கே.எல்.எம் ஜி லிங் | 550 |
| ★ | நடுத்தர ரவைகள் | 1759 |
| ★ | தண்ணீர் கான் | 04 |
| ★ | சப்பாத்து (சோடி) | 02 |
| ★ | கிட்பாக் | 02 |

## 1350 மெற்றிக் தொன் அரிசி குமணவில் வரும்

(யாழ்ப்பாணம்)

வார இறுதியில் பருத்தித்துறையை வந்தடையுமென எதிர்பார்க்கப்படுகின்ற "குமண" கப்பலில் எடுத்து வரப்படுகின்ற உணவு மற்றும் பொருள்களின் விபரம் வருமாறு:-

யாழ். செயலகத்திற்கு 430 மெற்றிக் தொன் மா, 150 மெற்றிக் தொன் சீனி, 350 மெற்றிக் தொன் அரிசி இயவையும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 300 மெற்றிக் தொன் மா, 100 மெற்றிக் தொன் சீனி, 1000 மெற்றிக் தொன் அரிசி, 20 மெற்றிக் தொன் மைசூர்ப்பருப்பு, 5 மெற்றிக் தொன் சோப், 12 மெற்றிக் தொன் பால்மா, 5 மெற்றிக் தொன் ரவ்வை மற்றும் யாழ். பிரதான தபாலகத்திற்கான 220 தபால் பொதிகளும் எடுத்துவரப்படுகின்றன என தெரியவருகின்றது. [ப]

## 3-வது கப்பலில் உணவு அனுப்புக

### திட்டப்பணிப்பாளர் கடிதம்

(யாழ்ப்பாணம்)

"தற்பொழுது யாழ். மாவட்டத்தில் பெரும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. தேவையான அளவு உணவுப் பொருள்கள் இந்த அனுப்பப்படாததனால் மக்கள் பஞ்சத்தாலும்,

[5 ஆம் பக்கம் பார்க்க]

## காங்கேசன் ஊடாக உணவு; அதிகாரிகள் முயற்சி

[யாழ்ப்பாணம்]

காங்கேசன்துறையூடாக உணவு வாகனப் போக்குவரத்தை ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

இம்முயற்சியில் கொழும்பு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அலுவலகமும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகமும் துரித நடவடிக்கைகளை எடுத்து வருவதாகக் கொழும்பில் இருந்து நேற்று மாலை எமக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. ஏற்கனவே அத்தியாவசிய உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு கப்பல் ஒன்று காங்கேசன் துறை துறைமுகத்தை வந்தடைந்து விட்டது. இக்கப்பலில் எடுத்து வரப்பட்ட அத்தியாவசியப் பொருள்கள் காங்கேசன் களஞ்சியத்தில் களஞ்சியப்

[5 ஆம் பக்கம் பார்க்க]

## மீட்பு நிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் இன்று பிற்பகல் 3 00 மணி தொடக்கம் 3 30 மணிவரை மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை மீட்பு நிதி செலுத்தத் தவறியோர் இக்குறித்த நேரத்தில் தமது மீட்பு நிதிக் கடனைச் செலுத்த முடியுமென தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் வெற்றியரசன் தெரிவித்துள்ளார்.

## எறிகணை வீச்சினால் மக்கள் இடம் பெயர்வு

[தொல்புரம்]

வலிமேற்குப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் மக்கள் குடியிருப்புகள் மீது நேற்று காலை 7 30 மணியளவில் அகோர எறிகணைத் தாக்குதலை நடாத்தினர்.

இவ்எறிகணைகள் சுழிபுரம், பறளாய் பகுதிகளில் விழுந்து பாரிய சத்தத்துடன் வெடித்தன.

இதனையடுத்து பறளாய், கல்லைவேம்படி, குடாக்கனை, சுழிபுரம் மேற்கு இறாத்தலடி ஆகிய பகுதிகளில் வதியும் மக்கள் அச்சம் காரணமாக தமது வசிப்பிடங்களிலிருந்து இடம் பெயர்ந்து வந்துள்ளனர்.

மேற்படி பகுதிகளிலிருந்து

[5 ஆம் பக்கம் பார்க்க]

## ஒமந்தையில் விமான தாக்கு மூவர் பலி; 6 பேர் காயம்

(வவுனியா)

வவுனியா ஓமந்தையில் நேற்றுக்காலை 11 30 மணியளவில் சிறிலங்கா விமானப்படை நடாத்திய குண்டுவீச்சுத் தாக்குதலில் மூன்று பொதுமக்கள் பலியாகினர். ஆறு பேர் காயமடைந்தனர்.

ஓமந்தை கமநலசேவை நிலையத்திற்கு அருகாமையில் இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் அடுத்தடுத்து நான்கு குண்டுகளை வீசி இவ் அனர்த்தத்தை விளைவித்துள்ளன.

குமாரசிங்கம் தெய்வானை [விளக்குவைத்தகுளம் ஓமந்தை], சிங்கராசா தேவமணி [நாவற்குடா அகதிமுகாம் மட்டக்களப்பு], காசிமதி நேசம்மா [நாவற்குடா அகதிமுகாம் மட்டக்களப்பு] ஆகியோரே இக்குண்டுவீச்சுத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள் ஆவர்.

சிவசுப்பிரமணியம் சூரியகலா (கனகராயன் குளம்), ஆறுமுகம் ஜெகதீஸ்வரி (பெரியகல்லாறு 2ஆம்குறிச்சி மட்டக்களப்பு), கந்தையா பத்மா (பெரியகல்லாறு 3ஆம் குறிச்சி மட்டக்களப்பு), சரவணமுத்து சாந்திமலர் (துறைநீலாவணை

[5 ஆம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## தேவை

யாழ்நகரிலோ அல்லது சுற்றாடலிலோ ஸ்ரூடியோ நிறுவுவதற்கு தகுந்த வீடு வாடகைக்கு தேவை. தொடர்பு இல. 202, கோவில் வீதி. நல்லூர் (கைலாசபிள்ளையார் கோவில் முன்பாக) (4199)

## பற் சிகிச்சை நிலையம்

கொக்குவில்/இந்து கல்லூரிக்குஎதிரில் கே.கே. எஸ் வீதி கொக்குவில். பா.நே தினசரி 4 பி.ப.- 6 பி.ப, ஞாயிறு: 10மு.ப - 12 ந.ப (4056)

## தேவை

ஓவிய வகுப்புக்களும், ஓவிய கூடமும் அமைப்பதற்கேற்ற வீடு யாழ். சுற்றாடலில் வாடகைக்கு தேவை. தொடர்பு இல: 202, கோவில் வீதி, நல்லூர். (கைலாசபிள்ளையார் கோவில் முன்பாக) (4200)

## வியாபாரிகட்கு

உள்நாட்டு, வெளிநாட்டு அழகுசாதன பொருள்களும், லேஸ் தையல் பொருள்கள், எவர்சில்வர், ஸ்கூல் ரவலிங் சான்பாக், இமிரேசன் கவரிங் நகைகள், விளையாட்டுப் பொருள்கள் மொத்தமாகப் பெற்றுக்கொள்ள ஜெயா அழகுசாதன மாளிகை 177A மின் நிலைய வீதி யாழ்ப்பாணம். (சி-5924)

## யாழோசையின் இசை வகுப்புகள்

வாய்ப்பாட்டு, வயலின், வீணை ஆகிய வகுப்புகள் 6-2 93 (சனி தைப்பூசம் அன்று காலை 9 00 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளன. தொடர்பு: யாழோசை, 61, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (4207)

## அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாம்

எம்மிடம் றேடியோ, மணிக்கூடு திருத்தும் வாடிக்கையாளர்கட்கு மூன்று(3) அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாமாக வழங்கப்படும். டிக்காவாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமை) யாழ்ப்பாணம். கிளை; இலங்கை வங்கி அருகாமை, சாவகச்சேரி (எலெக்ரோனிக் ஒட்டோமற்றிக் கடிகாரங்கள் திருத்துவதில் கைதேர்ந்தவர்கள்.) (சி-5918)

## மன்னார் பூநகரி பாதை திறப்பு

மன்னார் - பூநகரி பிரதான பாதை போக்குவரத்துக்காக நேற்று முதல் திறந்துவிடப்பட்டுள்ளதாக கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

இவ் வீதியைப் பயன்படுத்துவோர் மாந்தையில் உள்ள பாதுகாப்புப் படையினரது சோதனை நிலையத்தில் சோதனைக்குட்படுத்தப்படுவர் என்று கூறப்படுகிறது.

## வியாபார வரி அறவிட நடவடிக்கை

மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடாத்தப்படும் வியாபார நிலையங்களுக்கு வியாபாரவரி அறவிடும் பொருட்டு இடம் பெயர்ந்த பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் முகாமையில் இருக்கும் வியாபார நிலையங்களின் இலக்கம், வீதியின் பெயர் போன்ற விபரங்கள் அடங்கிய பட்டியலை உடன் தனக்கு அறிவிக்குமாறு மாநகர ஆணையாளர் பிரஸ்தாப சங்கங்களுக்கு அறிவித்தல் விடுத்துள்ளார். [22]

# மிதிவெடியில் சிக்கியதால் படையினரில் ஒருவர் பலி;

(வவுனியா)

வவுனியா தாண்டிக்குளத்தில் மிதிவெடியில் சிக்குண்டு இராணுவ சிப்பாய் ஒருவர் பலியானார். மேலும் ஒருவர் படுகாயமடைந்தார்.

கடந்த 26ஆம் திகதி காலை வீதிக்கு அருகில் உள்ள தரிசு நிலப்பகுதியில் நடமாடிய இராணுவச் சிப்பாயே பலியானார்.

மேற்குறிப்பிட்ட சிப்பாய்கள் பயணிகளை சோதனை செய்வதற்கு தம்மைத் தயார் படுத்திக்கொண்டிருந்த வேளையில் மிதிவெடியில் சிக்குண்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

படுகாயங்களுக்குள்ளானசிப்பாயின் கை எலும்புகள் முறிந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (தி)

# காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் விரைவில் மக்கள் மயமாகும்

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் விரைவில் மக்கள் மயமாக்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது இக் கூட்டுத்தாபனத்தை மக்கள் மயமாக்குவதால் அதன் ஊழியர்களுக்கும், காப்புறுதி செய்து கொண்டோருக்கும், அரசுக்கு ஏற்படக்கூடிய நலன்கள், மற்றும் பயன்கள் பற்றி அனுமானித்த பின்னர் மாத்திரமே மக்கள் மயமாக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று நிதியமைச்சின் செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


யாழ். பல்கலைக்கழக (வெளிவாரி)

இரண்டாம் வருட மாணவர்கள் PART I (B A.)

"அரசியல் விஞ்ஞான விரிவுரை"

ஆரம்பம்: 06-02-93 மு. ப. 10-00 மணி

(விரிவுரைகள் 06 மாதத்தில் பூர்த்திசெய்யப்படும்.)

விரிவுரையாளர்: செல்வா

பட்டப்படிப்புக்கள் கல்லூரி

148/1, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

[சி-5930]


## கண்ணீர் அஞ்சலி

செல்வி ரதிலக்ஷ்மி, ஜெயராணியின் தாயார்

திருமதி சிவபாக்கியம் கந்தையாவின்

மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

விஞ்ஞான மன்றம்

பலாலி ஆசிரியர் கலாசாலை.

(4210)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 24 — 08 — 1908

மறைவு: 04 — 01 — 1993

சிவபதம் அடைந்த

**வல்லிபுரம் நல்லையா**

(இளைப்பாறிய ஆசிரியர்)

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே!
அறிவின் சுடரொளியாய் ஒளி வீசி, பண்பின் சிகரமாய்த் திகழ்ந்து, பாசத்தின் உறைவிடமாய் வாழ்ந்து, இறைவனடி சேர்ந்து மாதமொன்றாகிடினும் எம் இதயங்களில் என்றென்றும் நிலைத்திருக்கும் அன்புத் தெய்வமே, உங்கள் ஆத்மா சாந்தி பெற எங்கள் நெஞ்சாரப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிச்சடங்கில் நேரில் கலந்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், பல வழிகளில் எமக்கு உதவி செய்தவர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

தங்கள் பிரிவால் வாடும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
மைத்துனர்மார்

டச்சு வீதி,
கல்வியங்காடு.

[சி-3931]

# பொரு. அழுத்தங்களை வெல்ல உற்பத்தியில் ஈடுபடல் அவசியம்

[யாழ்ப்பாணம்]

பொருளாதார ரீதியான அழுத்தங்களை வென்றெடுப்பதற்காக பாரம்பரிய முறைகளைப் பயன்படுத்தி முழு மூச்சுடன் உற்பத்தியில் ஈடுபட வேண்டியது ஒவ்வொரு தமிழீழக் குடிகளினதும் தலையாய கடமையாகும் என்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச் செய்திக் குறிப்பில் மேலும் சுயசார்புப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய அதே சமயம் மண்ணின் வளங்களை மூலப் பொருள்களாகக் கொண்டு உற்பத்தியைப் பெருக்கி உணவுத் தேவையும் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் கடந்த காலங்களில் சரியான திட்டமிடல் இன்மை காரணமாக வளம் நிறைந்த செம்மண் பிரதேசத்தில் வீடுகள், கடைகள், கல்லூரிகள் என்பன கட்டப்பட்டிருப்பதால் விவசாய நிலங்கள் இழக்கப்பட்டுள்ளன. எனவே விவசாயச் செய்கைக்கேற்ற விளை நிலங்களைப் பிரத்தியேக கவனத்தோடு பாதுகாக்கும் நோக்கத்துடன் சுயசார்பு பொருளாதாரத்தைக்கட்டியெழுப்பும் பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வரும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் சரியான புள்ளி விபரங்களைத் திரட்டும்வேலையை தற்போது வட தமிழீழத்தின் யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்கொண்டுள்ளது. நெற்பயிர், மற்றும்மேட்டு நிலப் பயிர்ச்செய்கை பற்றிய விபரங்கள் பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தின் புள்ளி விபரக் கிளையினால் திரட்டப்பட்டு வருகின்றது

# சற்கை நெறிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக்கல்லூரியில்நீர்க்குழாய் பொருத்துதல் கற்கை நெறி, மேசன்தொழில் கற்கைநெறி, மரப்பொறி இயக்க வல்லுனர் கற்கை நெறி போன்ற கற்கை நெறிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன இக்கற்கை நெறிகளில் சேர விரும்புவோர் எதிர்வரும் பதினைந்தாம திகதிக்கு முன்பாக விண்ணப்பிக்க வேண்டுமெனவும், க.பொ.த சாதாரண வகுப்பில்ஆறு பாடங்கள் சித்தியடைந்திருத்தல் அடிப்படைத் தகுதியாக கருதப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஐந்து வர்த்தகர்களை கைது செய்யத் தயாராம்

[கொழும்பு]

கொழும்பில் ஐந்து பிரபல வர்த்தகர்கள் மீது சிறிலங்கா இரகசியப் பொலிசார் குறி வைத்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்களை கைது செய்யத் தயார் நிலையில் இருப்பதாக இரகசியப் பொலிசார் அறிவித்துள்ளனர். புலிகளுக்கு கோடிக்கணக்கில் இவர்கள் பணம் வழங்கினார்கள் என சிறிலங்கா இரகசியப் பொலிசார் தெரிவித்தனர்,

# வவுனியா நகர் செல்லும் பலர் இராணுவத்தால் கைது

[வவுனியா]

வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தால் பலர் கைது செய்யபபட்டுள்ளனர். பலரின் நிலை அறிய முடியவில்லை என்று தேடிச் சென்ற குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர் பரமு-தவம் என்ற சேமமடு பகுதியைச் சேர்ந்தவரும் தேவராசா என்ற விளாத்திக்குளம் பகுதியைச் சேர்ந்தவரும் இராணுவத்தால் கைதாகியுள்ளனர். [தி]

## நினைவு கூருகின்றோம்...

**1993-2-3**

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் திருமலை - தம்பலகமம், பட்டிமேடுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழிளைஞர்கள்.

1989 ஆம் ஆண்டு இந்தியப் படையினரால் படுகொலை செய்யபபட்ட யாழ் - மிருசுவில், குருக்கள்மாவடியைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1990 ஆம் ஆண்டு மன்னார் - முள்ளிக்குளம் பகுதியில் எதிர்பாராத விதமாகக் கைக்குண்டு வெடித்ததில் எமைப் பிரிந்த -

சின்னராஜேந்தர் [நாககந்தரம் சிறீபாலன் - பிரதான வீதி, பேசாலை - மன்னார்]

1991 ஆம் ஆண்டு கிளிநொச்சி - பளை, கிளாலிப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

மதுமிதா [பொன்மலர் பொன்னம்பலம் - 26, கோவிற்குளம் - வவுனியா]

யாழ் - மாவிட்டபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

கஜன் [செபமாலைமுத்து ஜக்சன் - 128, குறுக்குத் தெரு, தவசிக்குளம், மிருசுவில் - யாழ்.]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-5927)

### சில பத்திரிகை நிறுவனங்கள்

# வெளிநாட்டுசக்திகளின் உதவியுடன் அரசை கவிழ்க்க முயற்சிக்கின்றன

## ஜனாதிபதி பிரேமதாசா குற்றச்சாட்டு

(கொழும்பு)

சில பத்திரிகை நிறுவனங்கள் வெளிநாட்டுச் சக்திகளின் துணையுடன் அரசைக் கவிழ்க்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கூறியுள்ளார்.

மாத்தளையில் ஆடை தயாரிப்பு தொழிற்சாலை ஒன்றைச் சுற்றிப் பார்வையிட்ட பின்னர் பொதுக் கூட்டமொன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில்; இந்த சக்திகள் ஜே.வி.பி.யினருக்கு புத்துயிர் ஊட்டவும் முயற்சிக்கின்றன என்றும் தெரிவித்தார்.

பக்கச் சார்பற்ற பத்திரிகை நிறுவனங்களைச் சேர்ந்தோர் அண்மையில் நுகேகொடவில் நடைபெற்ற ஆட்சேபக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை எனவும் குறிப்பிட்ட அவர் திருமதி சிறிமாவோவின் ஆட்சிக் காலத்தின் போது தவச பத்திரிகை நிறுவனம் மீது சீல் வைக்கப்பட்டதையும் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையிலும், படையினருக்கு மனத்தளர்ச்சியை ஏற்படுத்தும் வகையிலும் இப்பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. அத்துடன் ஜே.வி.பி யினரின் எழுச்சிகளுக்கு புத்தூக்கம் தரும் வகையிலும் இவை செய்திகளை வெளியிடுகின்றன எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# கடன் நிறுத்தம் ஆசிரியர்கள் விரக்தி

மட்டக்களப்பு மாவட்டத்தில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு சம்பள முற்பணக் கடன்கள் வழங்குவது தொடர்பாக வட-கிழக்கு மாகாண சபை இவ்வருடம் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாததையிட்டு மேற்படி ஆசிரியர்கள் விரக்தி அடைந்துள்ளனர்.

வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு இரு வருட சம்பள முற்பணக் கடனும் ஏனைய தேவைகளும் ஆறு மாத முற்பணக் கடனும் வழங்கப்பட்டு வந்தன. ஆனால் வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் உத்தரவு காரணமாக கடந்த வருடம் மார்ச் மாதம் முதல் இவை நிறுத்தப்பட்டுள்ளன.

இக்கடன்களுக்கு விசேட ஒதுக்கீடுகள் வழங்கப்படவில்லை எனவும் இது குறித்து அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதெனவும். நிதி கிடைத்ததும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் வட-கிழக்கு மாகாண அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் மட்டக்களப்பில் இதுவரை விண்ணப்பித்தோருக்கு கடன் வழங்க 150 இலட்சம் ரூபா தேவையென மதிப்பிடப்பட்டிருக்கின்றது.

### சர்வதேச ரீதியில்

# புலிகள் நடவடிக்கை பற்றி தகவல் திரட்ட பணிப்பு

சர்வதேச ரீதியில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கை குறித்த முக்கிய தகவல்களை தருமாறு இந்திய மத்திய, மாநில உயர் அதிகாரிகளிடம் ராஜீவ் காந்தி கொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் ஜெயின் ஆணைக்குழு கோரியுள்ளது.

இந்தியாவிலுள்ள தீவிரவாதக் குழுக்களுடன் விடுதலைப் புலிகளுக்கு உள்ள தொடர்புகள் பற்றியும் இவ் ஆணைக்குழு தகவல்களைக் கோரியுள்ளது

ஒரு கட்டத்தில் தமிழ்நாட்டிலிருந்த சகல தீவிரவாதக் குழுக்களும் நிராயுதபாணிகளாக்கப்பட்டு பின்னர் திடீரென மீண்டும் ஆயுதங்களும் வெடிமருந்துகளும் அவற்றுக்கு வழங்கப்பட்டன என்ற கூற்று சரியானதா என தமிழ் நாட்டின் முன்னாள் உளவறியும் பிரிவுத் தலைவர் கே. மோகன் தாஸை இந்த ஆணைக்குழு வினாவியுள்ளது.

விடுதலைப் புலிகளின் இராணுவ உளவறியும் பிரிவின், குறிப்பாக இந்திய அமைதிப் படை செயற்பட்ட காலத்தில் அதன் நடவடிக்கை பற்றிய சத்தியக்கடதாசி ஒன்றை சமர்ப்பிக்கும்படி மாநில பாதுகாப்புத்துறை அமைச்சு கேட்டுள்ளது. இத்தகவலை இந்தியன் எக்ஸ்பிரஸ் சஞ்சிகை வெளியிட்டுள்ளது.

# 'ராவய' காரியாலயம் மீது அரச அதிகாரிகள் பாய்ச்சல்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து வெளிவரும் 'ராவய' வார பத்திரிகை அலுவலகம் மீது அரச இலாகாக்களின் அதிகாரிகள் திடீர் சோதனை ஒன்றை மேற்கொண்டதுடன், அச்சக உரிமையாளர், காரியாலய கட்டட உரிமையாளர் ஆகியோர் பொலிஸ் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளனர்.

தண்ணீர் கட்டண அதிகாரி, வருமானவரி அதிகாரி ஆகியோர் ஒரே நேரத்தில் இச் சோதனைகளில் ஈடுபட்டதாகவும், தொலைபேசி மிரட்டல்கள் வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மடு அகதிமுகாம் பாடசாலை இரு பிரிவுகளாக ஆரம்பம்

(மன்னார்)

மன்னார் மடு அகதி முகாமில் இயங்கி வரும் திறந்த நிவாரண பாடசாலை தற்பொழுது இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் மூலம் வவுனியா, மன்னார் மாவட்ட கல்வித் திணைக்களங்களின் உதவியைப் பெற முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை இந்த பாடசாலை மாணவர்களைப் பாதுகாப்பு எல்லைக்குள்ளே வகுப்புக்களை நடத்த வேண்டும் என்று மடுநிர்வாகம் வலியுறுத்தி வருகின்றது

இப்பாடசாலைகளில் சுமார் 5000க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. [நி]

# பாதுகாப்பு நிதிக்கு 28 கோ. நன்கொடை

(கொழும்பு)

சிறிலங்கா பாதுகாப்பு நிதிக்கென இதுவரை 28 கோடி 60 லட்சம் ரூபா நன்கொடையாகக் கிடைத்துள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

சிறிலங்கா அரசினால் தேசிய பாதுகாப்பு நிதிக்கென பொதுமக்களிடமிருந்து நிதி திரட்டும் வேலைகள் 1990 ஜூன் 20 இல் ஆரம்பிக்கப்பட்டது தெரிந்ததே

இவ்வாறு திரட்டப்படும் நிதி திறைசேரி உண்டியல்கள், தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றில் முதலீடு செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. தற்போது உள்ள தொகையின் அடிப்படையில் வருடாந்தம் வட்டியாக ஆறு கோடி ரூபா பெறப்படுவதாகவும் இப்பணம் கடந்த இரண்டு வருடங்களாக படையினரின் பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் படையினரின் சேமநல நடவடிக்கைகளுக்கென இப்பணத்திலிருந்து 5 கோடி 28 லட்சத்து 30 ஆயிரத்து 180 ரூபா செலவிடப்பட்டுள்ளது.

ஆயுதப்படையினருக்கான உபகரணங்கள் வாங்குவதற்கு 5 கோடி ரூபாவும் ராணுவப் படையினரின் வீடமைப்புத் திட்டத்திற்கும் இந்நிதியிலிருந்து பணம் பெறப்பட்டுள்ளது.

காயமடையும் படையினருக்கான மருத்துவச் செலவு மற்றும் கால்களை இழந்த படையினருக்கு செயற்கைக் கால்களைப் பொருத்துவதற்கும் இந்த தேசிய பாதுகாப்பு நிதி பயன்படுத்தப்படுகிறது.

## தங்கப் பதக்கம்

காரைநகர் மணிவாசகர் சபை நடாத்திய சைவசமயப் பாடப் பரீட்சையில் இம்முறை இரண்டு மாணவர்களுக்கு தங்கப்பதக்கம் பரிசு வழங்கப்பட்டன. அதிக கூடிய புள்ளிகளைப் பெற்ற காரைநகர் யாழ்ட்டன் கல்லூரி மாணவி செல்வி த. தவமணிக்கும் [ஆண்டு 7], செல்வி பே கயல்விழிக்கும் [ஆண்டு 4] இப்பரிசுகள் வழங்கப்பட்டன. மற்றும் இப்பரீட்சையில் மிகவும் திறமையாக சித்திபெற்ற 49 மாணவர்களுக்கும் பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்பட்டன.

இப்பரிசில்கள் யாவும் காரைநகர் மணிவாசகர் சபை நடாத்திய 38ஆவது மணிவாசகர் விழாவில் வைத்து நல்லை ஆதீன முதல்வரின் ஆசியுரையுடன் வழங்கப்பட்டது.

## திறப்பு

மூளாய் கிராமியப் பொறுப்பாளர் திரு கீரன் அண்ணா அவர்களின் அரும்பெரும் முயற்சியினால் மூளாய் காளி கோயிலடியில் ஓம்சக்தி சனசமூக நிலையம் சம்பிரதாயபூர்வமாக சங்கானை வட்டப் பொறுப்பாளர் திரு ம பூங்குன்றன் அவர்களால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது

இவ்வைபவத்தில் சுழிபுரம் சிற்றூர் பொறுப்பாளர் திரு. வெற்றிச்செல்வன் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

மேலும் இவ்விழாவில் சனசமூக நிலையங்களின் மேற்பார்வை உத்தியோகத்தர், மகளிர் முன்னணி தமரைக்கா மூளாய் உற்பத்திக்குழுத்தலைவர் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்கள்.

## அலங்கார கலை பாடநெறி

யாழ் பல்கலைக்கழக புறநிலை அலகினால் விரைவில் "அலங்காரக்கலை பாடநெறி" அறிமுகம் செய்யப்பட உள்ளது இப்பாட நெறியில் கேக் அலங்காரம், மலர் அலங்காரம், மனை (வீட்டு) அலங்காரம் என்பன கற்கை நெறிகளாக போதிக்கப்பட உள்ளன.

இத்தகவலை புறநிலை படிப்புகள் அலகு பொறுப்பதிகாரி திரு. ஆர். சிவச்சந்திரன் தெரிவித்தார். (07)

## தையல் பயிற்சி

வேலையற்று இருக்கும் படித்த மகளிர்களுக்கு சுயதொழிலை ஊக்குவிக்கும் வகையில் கரவெட்டி இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளை மேலும் நூற்றுக்கு மேற்பட்ட யுவதிகளுக்கு இலவச தையல் பயிற்சி வகுப்பு ஒன்றை நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்துள்ளது. மேலும் இவர்களுக்கு முதலுதவிப் பயிற்சியும் அளிக்கப்பட வுள்ளன.

இதே வேளை ஆண்களுக்கான இலவச தையல் பயிற்சி வகுப்பும் விரைவில் ஆரம்பக்கப்படவுள்ளன இதற்கென 50 இளைஞர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனரென கிளை தலைவர் தெரிவித்தார். [யோ]

# மதசார்பின்மையே பிரச்சினையை தீர்க்கும்

**- கலாநிதி சுமணசிறி லியனகே**

பிறப்புப் சாட்சிப் பத்திரங்களை மாவட்டக் காரியாலயங்கள் மூலம் வழங்குவது அதிகாரம் பரவலாக்கம் ஆகாது. அதிகாரப் பரவலாக்கம் வேறு மாதிரியானது என்றார் கலாநிதி சுமணசிறி லியனகே.

பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளரும் லங்கா சமசமாஜக் கட்சிப் பிரமுகருமான லியனகே கண்டியில் "இனப் பிரச்சினை" என்ற தலைப்பில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்

தொடர்ந்து பேசிய அவர், இனப்பிரச்சினைக்கான தீர்வை ஒரு மதசார்பற்ற அரசினால்தான் எட்ட முடியும். மதசார்பின்மை என்ற எண்ணக்கருவை இப்போதுள்ள யாப்பு மீறிவிட்டது. பௌத்தம் அரச சமயமாக்கப்பட்டுள்ளது இதனைத் தமிழர்களாலும், முஸ்லிம்களாலும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்றும்,

இப்போதுள்ள யாப்பு திருத்தப்பட வேண்டும். ஆட்சியில் உள்ளவர் ஜனாதிபதி பிரேமதாசா என்பதல்லப் பிரச்சினை. பிரேமதாசா செய்வதைத்தான் ஜே ஆர் ஜெயவர்தனாவும் செய்தார் சிறிமாவோ ஆட்சிக்கு வந்தாலும், லலித் ஆட்சிக்கு வந்தாலும் ஒரே காரியத்தைத்தான் செய்வார்கள், யாப்பு மாற்றப்பட வேண்டும், இது ஒரு ஜனநாயக விரோத யாப்பு என்றார்.

# வடக்கு-கிழக்குபிரிவினையை கூட்டணி ஏற்காது

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு மாகாணங்கள் இணைப்பற்ற எந்தத் தீர்வையும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்றுக்கொள்ளாது என கூட்டணியின் முக்கிய பிரமுகரான நீலன் திருச்செல்வம் தெரிவித்தார்.

வடக்கு- கிழக்கு மாகாணங்களின் நிரந்தர இணைப்பின் அடிப்படையிலான சமஷ்டி முறையே இலங்கையின் இனப் பிரச்சினைக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி முன்வைக்கும் தீர்வாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

# உடுகம்பொலவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

[கொழும்பு]

முன்னாள் பொலிஸ்மா அதிபர் உடுகம்பொல பிரேமதாசாவிற்கு எதிரான வழக்கு கொழும்பு உயர் நீதி மன்றத்தினால் மீண்டும் பிற்போடப்பட்டுள்ளது.

உடுகம்பொல சார்பில் வழக்கறிஞர் எஸ். எல். குணசேகராவை உடுகம்பொலவின் உறவினர் நியமித்திருந்தனர் இது தொடர்பான சட்ட நுணுக்கங்களை ஆராயவே விசாரணை பிற்போடப்பட்டுள்ளது. பெப்ரவரி 3-ம் திகதி வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று நீதிமன்றம் அறிவித்துள்ளது.

உடுகம்பொலவால் கையெழுத்திட்டு வெளியிடப்பட்ட சத்தியக்கடதாசி அரசுக்கு எதிரான அதிருப்தியை ஏற்படுத்தியதாகவும், மக்கள் மத்தியில் கருத்து வேறுபாட்டை உண்டுபண்ணியதாகவும் அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# தரம் 3, அதிபர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும்

[கொழும்பு]

உயர்கல்வி அமைச்சு இந்த வருடம் தரம் மூன்று, அதிபர்கள் சுமார் 5 000 பேரை தரம் இரண்டிற்கு உயர்த்தவுள்ளது.

தரம் மூன்று. அதிபர்கள் சேவையில் 10 வருடங்கள் சேவையிலுள்ளவர்கள் நேர்முகத் தேர்வின் மூலம் தரம் இரண்டிற்கும் பதவி உயர்வு செய்யப்படுவார்கள். எழுத்துப் பரீட்சை இடம்பெறாது.

இதேவேளை தரம் இரண்டு பதவிக்கான பரீட்சைக்குத் தோற்றியவர்களும் நேர்முகத் தேர்வுக்குச் சமுகமளிக்க வேண்டும் என்று உயர் கல்வி அமைச்சுப் பேச்சாளர் தெரிவித்தார்.

## பாலர் பாடசாலை திறந்து வைப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆதரவுடன் மூளாய் சிற்றூரவையின் அரசியற் துறைப் பொறுப்பாளர் கீரனின் ஒத்துழைப்புடனும், அயராத முயற்சியினாலும், வாணிநிகேதன் சனசமூக நிலையத்தில் கடந்த திங்களன்று முதல் பாலர் பாடசாலையொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த பல வருடங்களாக இப்பகுதியில் இவ்வாறானதொரு சிறுவர் பாடசாலை ஒன்று இல்லை என்ற நிலை மேற்படி முயற்சியினால் மாற்றியமைக்கப்பட்டு சிறுவர்களின் கல்விக்கு வழிசமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. [க]

பாகிஸ்தானுக்கு குத்தகைக்கு வழங்கிய

# போர்க் கப்பல்களை திரும்பப்பெற அமெரிக்க நிர்வாகம் முடிவு

பாகிஸ்தானுக்கு வழங்கிய எட்டுப் போர்க்கப்பல்களை மீளப் பெற்றுக்கொள்வதென அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

பாகிஸ்தான் நாட்டுக் கடற்படைக்கு குத்தகைக்கு எட்டு விரைவுப் போர்க்கப்பல்களையும், நாசகாரிக் கப்பல்களையும் அமெரிக்கா பல வருடங்களுக்கு முன் வழங்கியிருந்தது தெரிந்ததே.

தற்போது இக் கப்பல்களை மீளப் பெற்றுக்கொள்வது என்ற அமெரிக்காவின் முடிவை மீள்பரிசீலனை செய்யுமாறு பாகிஸ்தான் கடற்படைத் தலைவர் அட்மிரல் சைற் எம்கா விசேட வேண்டுகோள் ஒன்றை விடுத்தார்.

பாகிஸ்தான் கடற்படை அதிகாரி விடுத்த மேற்படி வேண்டுகோளை அமெரிக்கா நிராகரித்து விட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை பாகிஸ்தான் தாம் நீண்டகாலம் பயன்படுத்திய 5 கப்பல்களை இவ் வாரம் அழித்துவிடப் போவதாக அறிவித்துள்ளது.

## நீலகிரி காட்டினுள் மோதல் ஒருவர் பலி; இருவர் கைது

### காவல்துறையினர் அறுவர் காயம்

(சென்னை)

நீலகிரி மாவட்டம் கூடலூர் வனப் பகுதியில் சந்தனமரம் கடத்தும் கூட்டத்தாருக்கும் காவல்துறையினருக்கும் இடையே துப்பாக்கி மோதல் நடைபெற்றதாக தெரிய வருகிறது. இந்தத் துப்பாக்கிச் சண்டையில் கடத்தல்காரர் ஒருவர் கொலையுண்டதாகவும், இருவர் கைது செய்யப்பட்டதுடன் மூவர் தப்பியோடியிருப்பதாகவும் கோயம்புத்தூர் பொலிஸ் ஆணையாளர் கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில், காவல்துறையைச் சேர்ந்த ஆறுபேர் காயமடைந்திருப்பதாகவும், சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவித்தார்.

## இந்திய, ரஷ்ய கூட்டறிக்கையில் இஸ்ரேல்மீது கண்டனம்

நானூற்றி பதினாறு பாலஸ்தீனியர்களை நாடுகடத்திய இஸ்ரேலின் செயல் மேற்காசியாவில் நீடித்த சமாதானத்தை காணும் முயற்சிக்கு ஊறு விளைவிப்பதாக இருக்கின்றது என இந்தியாவும், ரஷ்யாவும் கூட்டாக வெளியிட்ட அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளன.

அவ் அறிக்கையில் மேலும், ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் தீர்மானத்தை அமுலாக்குமாறும், நாடு கடத்தப்பட்ட பாலஸ்தீனியர்கள் பத்திரமாக நாடு திரும்புவதை உறுதிப்படுத்துமாறும் இஸ்ரேலிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய அதிபர் யொறிஸ் யெல்சினின் புதுடில்லி விஜயத்தின் போது இவ் விடயம் குறித்தும் ஆராயப்பட்டதாகவும், அதையடுத்து இந்தக் கூட்டறிக்கை தயாரிக்கப்பட்டதாகவும் புதுடில்லியின் வெளியுறவு அமைச்சக செய்திக் குறிப்பொன்றில் கூறப்பட்டுள்ளது.

## சி. ஐ. ஏ. காரியாலயம் முன் துப்பாக்கித் தாக்குதல்

(வாஷிங்டன்)

துப்பாக்கி தாங்கிய மனிதர் ஒருவர் அமெரிக்க சி ஐ ஏ. தலைமைக் காரியாலய வாசலில் நின்ற கார்களை நோக்கிச் சுட்டு இருவரைக் கொன்றதுடன் மூவரைக் காயப்படுத்திவிட்டு தப்பிச் சென்றுவிட்டதாகத் தெரிய வருகிறது.

15,000 ஊழியர்களைக் கொண்ட இந்த சி. ஐ. ஏ. தலைமைக் காரியாலயம் வாஷிங்டனுக்கு வெளியே 10 மைல் தூரத்தில் அமைந்துள்ளது.

## பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்து

(கோலாலம்பூர்)

பிராந்தியப் பாதுகாப்பிலும் கூட்டுச் செயற்பாடு மற்றும் ஆயுத உபகரணத் தயாரிப்பில் ஒத்துழைப்பு போன்ற அம்சங்களை உள்ளடக்கியதான பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை இந்தியாவும், மலேசியாவும் செய்து கொள்ளவுள்ளன.

இதற்காக இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு கோலாலம்பூர்பயணமாகியுள்ளார்.

இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சர் ஒருவர் மலேசியாவிற்கு விஜயம் செய்திருப்பது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

மலேசிய அரசாங்கம் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளுக்கு அப்பால் தனது கடற்படையைப் பலப்படுத்த முயற்சிகள் மேற்கொண்டுள்ளது.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமெரிக்கா தனது பலத்தை குறைத்துக் கொள்வதால் ஏற்படும் வெற்றிடத்தை நிரப்ப இந்தியா, சீனா மற்றும் ஜப்பானுடன் இணைந்து செயற்பட வேண்டுமென மலேசியா விருப்பம் தெரிவித்துள்ளது. அமெரிக்கா பிலிப்பைன்சில் இருக்கும் இராணுவ மற்றும் கடற்படைத் தளங்களை விரைவில் மூட இருப்பது தெரிந்ததே.

## அமெரிக்கா மீது ரஷ்யா கண்டனம்

அமெரிக்கா, ஈராக் மற்றும் முன்னாள் யூகோ விவகாரங்களில் தமக்கு நிபந்தனை விதிப்பதாக ரஷ்ய அதிபர் கண்டனம் தெரிவித்துள்ளார்.


எளிமை! இனிமை!! திறமை!!!
அழைத்து மகிழுங்கள்!

"பாடு நிலா"
(மெல்லிசைக் குழு)

பல தரமான இசைக் கலைஞர்களைக் கொண்டு விசேஷ சலுகைகளுடன் நிகழ்ச்சிகளை வழங்குபவர்கள்.

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு:-
யோ. மகேந்திரா [சிற்பி]
5. (17). கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

[4206]



FOREIGN LANGUAGES STUDIES AND MUTUAL
**EXCHANGE OF INFORMATION CENTRE**

வெளிநாட்டு மொழிகள் பயிற்சி வகுப்புகளுக்கான மாணவர்கள் இன்று முதல் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

**பிரெஞ்ச், ஜேர்மன், யப்பான், ரஸ்லிய**

மொழிகள் ஆரம்பமுதல் கற்பிக்கப்படும்.

ஆங்கிலம் O/L , A/L மற்றும் உயர் கல்விக்கான வகுப்புகள்

தொடர்பு:-
ரி. எம். எஸ்.
162 A, கஸ்தூரியார் வீதி,
(ராஜா தியேட்டர் முன்பாக)
யாழ்ப்பாணம்.

[4203]



ஈழநாதம்
3ஆம் ஆண்டு
நிறைவுப் போட்டி

சிறுகதை, கவிதை, கருத்துப்படம்

முதலாம் பரிசு: தங்கப்பதக்கத்துடன் கூடிய 1500ரூபா ரொக்கப் பணம்.

இரண்டாம் பரிசு: 1500 ரூபா ரொக்கப் பணம்

மூன்றாம் பரிசு: 1000 ரூபா ரொக்கப் பணம்.

போட்டியில் பங்குபற்றி
பரிசில்களை வெல்லுங்கள்

முடிவு திகதி: 05/02/1993



வலி. கிழக்கு வடபகுதி பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம் (வ. உ.)
அச்சுவேலி.

முக்கிய அறிவித்தல்

சகல அங்கத்தவர்களுக்கும்,
நுகர்வோர்களுக்கும்.

பங்குப்பணம் ரூபா 100/-

1992ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் திருத்தச் சட்டத்திற்கமைய உபவிதி 18 (1) — ஒரு பங்கின் பெறுமதி ரூபா 100/ ஆகும்.

பங்குப்பணப் பெறுமதியை ரூபா 100/-ஆக அதிகரிக்காத தற்போதைய அங்கத்தவர்கள் 05-03-1993இற்குப் பின்னர் அங்கத்துவ உரிமையை இழந்து சங்கத்தின் இயக்குழு உறுப்பினராகவோ, பொதுச்சபை உறுப்பினராகவோ, பணிப்பாளர் சபை உறுப்பினராகவோ பதவி வகிக்க முடியாததுடன், வாக்களிக்கும் உரிமையினையும் இழந்து விடுவர். 05-03-93இற்குப் பின்னர் பங்கு நிலுவையைச் செலுத்தினாலும், செலுத்திய திகதியிலிருந்து ஒரு வருடம் அங்கத்துவ உரிமையை அனுபவிக்கக் காத்திருக்க வேண்டும்.

எனவே காலதாமதமின்றி தற்போது அங்கத்தவர்களாக இருப்பவர்கள் தமது பங்குப் பணத்தை ரூபா 100/- ஆக அதிகரிப்பதற்கு 05-03-1993ற்கு முன்னர் தங்கள் தங்கள் கிளைகளில் பணத்தைச் செலுத்தி அங்கத்துவத்தைப் பூரணப்படுத்துவதுடன், சங்க வளர்ச்சிக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு சங்கத் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தலைவர் 1-2-93 செயலாளர்

(இ-5929)



முக்கிய அறிவித்தல்

வட இலங்கை ஹோமியோபதி சங்கம்,
வட இலங்கை அக்கூபஞ்சர் சங்கம்,

ஆகியவை "MEDICINA ALTANATIVA" சர்வதேச திறந்த வெளி மாற்றுமுறை மருத்துவப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன என்பதை அறியத் தருகின்றோம்.

1993-ம் ஆண்டுக்குரிய பட்டப்படிப்புகளுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகவுள்ளன. 7-03-93-ம் திகதிக்குமுன் சங்கக் காரியாலயத்தில் ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை நேரில் விண்ணப்பிக்கலாம்.

DR. அ. கிருஸ்ணசாமி
தலைவர்

5 நாவலர் வீதி. ஐந்து சந்தி
யாழ்ப்பாணம்.

(4193)

## சிந்தனைக்கு

இன்றைய நாளை இறுகப்பற்றிக் கொள். நாளைய நாளைப் பற்றி அதிகம் நம்ப வேண்டாம்.
— ஹோரஸ்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 03 - 02 - 1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் - 05

# குழப்பம் அடையத் தேவை எதுவுமில்லை

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு எந்த வழியைப் பின்பற்றுவது என்று அரசாங்கம் குழம்பிய நிலையில் உள்ளது. அரசாங்கத்தில் உள்ள ஒரு பகுதியினர் விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேச்சு வார்த்தைகளை நடத்த விரும்புகின்றனர். ஒரு பகுதியினர் ஏனைய தமிழ்க்குழுக்களுடன் ஓர் உடன்பாட்டிற்கு வருதல் மூலம் புலிகளை ஓரம் கட்டி இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கலாம் எனக் கருதுகின்றனர். இன்னொரு பகுதியினர் இராணுவத் தீர்வே இனப்பிரச்சினைக்கு ஒரே தீர்வு எனக் கருதுகின்றனர். இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதியின் அரசியல் ஆலோசகரான தயான் ஜெயதிலகா தெரிவித்துள்ளார்.

ஆனால் இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்றால், இதில் தயான் ஜெயதிலக்கா குறிப்பிட்டது போன்று அரசாங்கம் இதில் குழப்பமடையவோ, அன்றி முடிவு எடுக்கமுடியாமல்தடுமாறவோ வேண்டிய அவசியம் ஏதும் இல்லை.

மேற்குறிப்பிட்ட மூன்று தீர்மானங்களில் கடைசித் தீர்மானமான இராணுவத் தீர்வு என்பது கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றது. ஆனால் அவ் அணுகுமுறை வெற்றி அளிக்கவில்லை. இதனால் உயிரிழப்பும், பொருளிழப்பும் ஏற்பட்டதே ஒழிய வேறு லாபம் எதுவும் ஏற்பட்டதாக இல்லை.

இரண்டாவது தீர்மானமான தமிழ்க் குழுக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி விடுதலைப் புலிகளை ஓரம் கட்டுவது அல்லது அழித்து விடுதல் என்பதும் நடைமுறைச் சாத்தியமற்றதென்பது அனுபவம் தந்த பாடம். கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பினும் வெற்றி கிட்டவில்லை. வெற்றி கிட்டப்போவதுமில்லை. ஏனெனில் கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் ஓர் அரசியல் சக்தியோ அன்றி இராணுவ சக்தியோ அல்ல. தமிழ் மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிப்பவர்களும் அல்ல. அவர்களுக்கு அரசியல் தளம் என்ற ஒன்றே இல்லை. இந்நிலையில் அச்சக்திகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதினால் பயனேதும் கிட்டப்போவதில்லை.

உண்மையில் அரசாங்கம்இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமானால், முதலாவதாகக் குறிப்பிட்டது போன்று விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதுதான் ஒரே வழி ஆகும். ஆனால், கடந்த காலத்தில் புலிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்தது போன்று இப் பேச்சுவார்த்தையும் இடையில் முறிவடையாமல் ஒரு நிரந்தர அரசியல் தீர்வு நோக்கிப் போகவேண்டுமானால் முதலில் அரசாங்கம் இனப்பிரச்சினை குறித்து தனது தெளிவான நிலைப்பாட்டை முன்னெடுக்க வேண்டும்.

அதாவது, தமிழர் பாதுகாப்புடனும், கௌரவத்துடனும் வாழக்கூடியதான தீர்வுத் திட்டத்தை அரசாங்கம் முன் வைக்கவேண்டும். இவ்வாறு முன் வைக்கும் பட்சத்தில்தான் இனப்பிரச்சினைக்கான, அரசியல் ரீதியான சமாதானத் தீர்வை நிலைநாட்ட முடியும். அதைவிடுத்து சிங்களப் பேரினவாதிகளைத் திருப்திப் படுத்துவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு அரசாங்கம் செயற்படுவதினாலேயே இனப்பிரச்சினைக்கு தீர்வு என்ன என்பதையிட்டு குழப்பமடைய வேண்டியுள்ளது. தயான் ஜெயதிலகாவிற்கும் சங்கடமான நிலை உருவாகியுள்ளது.

# எமது பிள்ளைகளை நாமே களத்திற்கு அனுப்ப வேண்டும்

## துணைப்படைவீரர் பேச்சு

(நமது நிருபர்)

எமது பிள்ளைகளை நாமே ரத்தத் திலகம் இட்டு களத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த துணைப்படை வீரர் ஒருவர் தெரிவித்தார்.

துணைப்படை வீரர்கள் கௌரவிக்கப்பட்டு அவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கும் வைபவம் கடந்த முதலாம்திகதி முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெற்றபோது அதில் கலந்துகொண்ட அவர் மேலும் கூறுகையில் முன்னைய காலங்களில் நாம் சிங்களவர்களிடம் அடிவாங்கி ஓடினோம். ஆனால் இனியும் அவ்வாறு அஞ்சி ஓடக்கூடாது எனவும் தெரிவித்தார். அத்துடன் சாவு அனைவருக்கும் வருவதுதான். ஆனால் அதை நாம் அர்த்தமுடைய தாக்கிக் கொள்ள வேண்டும். எதிரியின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை நீளவிடாது தடுக்க வேண்டும். சண்டைகள் நடைபெறும் இடங்களுக்கு வீரர்கள் சென்று விடுவதால் எமது கிராமங்களை நாமே காக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

முல்லைமாவட்ட சிறப்புத் தளபதி அன்பு மங்கள விளக்கேற்றி விழாவினை ஆரம்பித்து வைத்தார். இவ்விழாவில் முல்லைமாவட்டத்தைச் சேர்ந்த பெரும் தொகையான துணைப்படை வீரர்கள் கலந்துகொண்டனர். இதில் நெடுங்கேணி, உடும்புக்குளம், வட்டுவாகல், செம்மலை, அலம்பில், குமுழமுனை, கொக்குத்தொடுவாய் பிரதேசங்களைச் சார்ந்த துணைப்படை வீரர்களும்கலந்துகொண்டு உரைநிகழ்த்தினர்.

முல்லை மாவட்ட சிறப்புத் தளபதி அன்பு துணைப்படை வீரர்களோடு கலந்துரையாடினார். இதன்போது 1990 இல் நாம் சொன்னதை மூன்று ஆண்டுகளின் பின் உணர்ந்து இன்று பெரும்படையணியாக ஒன்றுபட்டுள்ளீர்கள். தேசிய விடுதலையின் வெற்றிக்கான ஆரம்பமே இது

பிறந்த மண்ணையும்உங்கள் குடும்பத்தையும் எதிரியிடமிருந்து பாதுகாக்க இன்று நாம்உங்களுக்குவழங்கும்இந்த ஆயுதங்கள் பயன்படும் நீங்கள் அனைவரும் பிரதேச வேறுபாட்டை மறந்து பலம்மிக்கஅணியாய் இணைந்து செயற்பட வேண்டும். வலுவான எமது படைக்கு துணையான படை தேவை இத்துணைப்படையில் சேர வேண்டியவர்களும் இருக்கிறார்கள். அவர்கள்வலுவான படையில் இணைந்து கொள்ள முன்வர வேண்டும். சொந்த மண்ணை விட்டு ஓடி ஓடி புதிய எல்லைகளை நாம் வகுக்கக்கூடாது என்றார்,

இவ் விழாவின்போது முல்லை மாவட்ட சிறப்புத் தளபதி அன்புதுணைப்படைவீரர்களுக்கு தானியங்கித் துப்பாக்கிகளை வழங்கினார்.

வவுனியாவில்

# செஞ்சிலுவையின் வாகனங்கள் அத்து மீறிப் பயன் படுத்தப்பட்டது

(வவுனியா)

வவுனியா நகரில் புளொட் குழுவினரால்சமீபத்தில்நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டி நிகழ்வின் போது இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கத்தின் வவுனியா கிளைக்குரிய வாகனங்கள் அத்துமீறிப் பாவிக்கப்பட்டதனால் இக்கிளையின் அதிகாரிகள் மனமுடைந்துள்ளனர்.

புளொட் குழுவினர் கிளை அதிகாரிகளின் அனுமதியில்லாமல் நிர்ப்பந்தம் மூலம் செஞ்சிலுவைச் சங்கத்திற்குரிய வாகனத்தைப் பயன்படுத்தியுள்ளனராம்.

இதற்கு இராணுவ உயர் அதிகாரிகளின் ஆதரவும் இருந்ததென்று தெரிவிக்கப்பட்டது. (தி)

# ராஜீவ் கொலை வழக்கு விசாரணை ஆரம்பம்

(டில்லி)

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்குத் தொடர்பான விசாரணை இன்று ஆரம்பமாக இருக்கிறது.

மேற்படி வழக்குத் தொடர்பாக சுமார் 26 பேர் குற்றம் சுமத்தப்பட்டுள்ளனர். பூந்தமல்லி சிறைச்சாலை வளாகத்தில் இந்த வழக்கு விசாரணை நடைபெற இருக்கிறது. இவ் விசாரணையை முன்னிட்டு சுமார் 70 லட்சம் ரூபா செலவில் இச் சிறைச்சாலையின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது இச்சிறைக்கூடத்திற்கு அண்மையில் இருக்கும் நீதிமன்றத்தினது பாதுகாப்பும் சுமார் 23 லட்சம் ரூபா செலவில் பலப்படுத்தப் பட்டிருக்கிறது. சிறைக் கூடம் முழுவதும் தடை செய்யப்பட்ட பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. மேற்படி விசாரணைகள் யாவும் சிறப்புப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

3-வது கப்பலில்

பட்டினியாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்குக் காரணம் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரும் யாழ். அரச நிர்வாகமும் என மக்கள் சந்தேகிக்கின்றனர்.''

இவ்வாறு யாழ். செயலகத்திட்ட பணிப்பாளர் பத்மநாதன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் வடமாகாணத்திற்கான தற்போதைய அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணையாளர் விமானப்படை கொமாண்டர் புத்திசிறிவர்த்தனாவுக்கு அனுப்பியுள்ள அவசரச் செய்தியில் தெரிவித்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

அச்செய்தியில்; மாதாந்தம் எமது உணவுத் தேவையானது 11,800 மெற்றிக்தொன் ஆகும். இங்கு கப்பல் மூலம் கொண்டு வரக்கூடிய ஆகக் கூடிய தொகை 6000 மெற்றிக் தொன் மாத்திரமே எனவும், இப்பற்றாக் குறையின் காரணமாக மக்கள் பஞ்சத்தாலும், பட்டினியாலும் பாதிப்படைகின்றனர். தனிப்பட்ட முயற்சி எடுத்தாவது மூன்றாவது கப்பலை ஒழுங்கு செய்து பொருள்களை அனுப்பும்படியும்,

உணவுப் பொருளில் முதலிட பணம் இல்லையெனில் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களிடமும் வேறு நிறுவனங்களிடமும் முற்பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொக்குவில் வாசி அகாலமரணம்

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த அருள்பிரகாசம் இரவிகரன் என்பவர் அவுஸ்திரேலியாவில் அகாலமரண மடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயண

அனுமதி அட்டைகளைப்பயன்படுத்தி வடபகுதிக்கு வெளியே பயணம்செய்ய முடியும் என்பதனை போக்குவரத்து கண்காணிப்புபிரிவினர் பயணிகள் கவனத்திற்கு அறியத்தருகின்றனர்.

யாழ். மாவட்ட பயணிகளிடமே இவ் ஒழுங்கு பொருந்தும் என்பதனை கவனத்திற் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

காங்கேசன்

படுத்தப்பட்டு வருகிறது, அத்துடன் இப்பொருள்களை லொறிகளில் ஏற்றுவதற்கான ஒரு தொகுதி தொழிலாளர்களை தென்பகுதியில் இருந்து அழைத்து வருவதற்கும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

அதேவேளை யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் மேற்படி விடயம் தொடர்பாக நேற்று மாலை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார். (க)

# இன்று "குண்டலகேசி"

[யாழ்ப்பாணம்]

யாழ், பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றத்தின் ஆதரவில் இன்று இரண்டு காட்சிகளாக நடைபெறவிருந்த திருமறை கலாமன்றத்தின் "குண்டலகேசி" நாடகம் தவிர்க்க முடியாத காரணமாக இன்று பிற்பகல் 5.00 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் ஒரேகாட்சியாகநடைபெறவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

# சாளரம் தொகுப்பு

[யாழ்ப்பாணம்]

சாளரம் ஓராண்டுத் தொகுப்பு நூல் வெளிவந்து விட்டது. 1991 ஜூன் முதல் 1992 ஜூலை வரை வெளிவந்த சாளரத்தின் முழுப்பிரதிகளும் ஒன்றிணைக்கப்பட்டு தரமான அட்டையுடன் பரபரப்புடன் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

# கருத்தரங்கு

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் கல்வி நிலையம் நடாத்தும் கருத்தரங்கு இன்று முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறும். இதில் திரு. என். விஜயசுந்தரம் (பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்) 'வள்ளுவனின் நெறியில் வாழ்வு' என்பது பற்றிக் கருத்துரை வழங்குவார்.

# இரு பொலிசாருக்கு கத்திக்குத்து

(கொழும்பு)

ஜே வி. பி அமைப்பின் இராணுவப் பிரிவில் இருந்தாரென்ற சந்தேகத்தின் பேரில் சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்யச்சென்றபொலிஸ்காரர்கள் இருவரையும் அச்சந்தேகநபர் கத்தியால் குத்திவிட்டு தப்பிச் சென்றுவிட்டார். கத்திக் குத்துக்கு இலக்கான பொலிசார் இருவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் தலைமைக் காரியாலயம் அறிவித்தது.

ஓமந்தையில்

7ஆம்வட்டாரம் மட்டு), தங்கரட்ணம் சின்னத்தங்கம் (பெரியகல்லாறு, மட்டு) ஸ்ரீலோகநாதன் (பருத்தித்துறை) ஆகியோர் படுகாயமடைந்தவராவர்.

எறிகணை

இடம் பெயர்ந்த மக்கள் தற்போது தொல்புரம் மூட்டுச் சந்தைக் கட்டடத்திலும், வழக்கம்பரை அம்மன் ஆலயத்துக்கு அருகாமையிலும், வட்டுக்கோட்டையிலும் பாதுகாப்புக் கருதி தங்கியுள்ளனர்.

## ஆசிரியர் இடமாற்றம் அதிகாரிகளிடையே இழுபறி

ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக யாழ் கல்விப் பணிப்பாளருக்கும், வேலணைக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளருக்கும் இடையில் இழுபறி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆறு ஆசிரியர்களை வேலணைக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இடமாற்றம் செய்தது தொடர்பாக யாழ். கல்விப்பணிப்பாளர் அவரிடம் விளக்கம் கோரியுள்ளார்.

கெற்பெலி கமலாசினி வித்தியாலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஓர் ஆசிரியரின் இடமாற்றத்தை ரத்துச் செய்து, அவரை யாழ் நகரப் பகுதியில் இயங்கும் வேலணைக் கோட்டப் பாடசாலை ஒன்றுக்கு மாற்றும்படியும் யாழ். கல்விப் பணிப்பாளர் வேலணைக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளரைப் பணித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பரிசூதியப் பத்திரங்கள் விமானத்திலிருந்து வீச்சு

சிறிலங்காவின் சுதந்திர தினத்தன்று கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டங்களில் விமானத்திலிருந்து பரிசூதியப் பத்திரங்களை வீசுவதற்கு மக்கள் வங்கி முயற்சி மேற்கொண்டுள்ளது. பெப்ரவரி நான்காம் திகதியான நாளைக் காலை பத்து மணி முதல் பன்னிரண்டு மணி வரை இப்பத்திரங்கள் வீசப்படவுள்ளன.

இதைவிட கண்டி, குருநாகல், மாத்தறை, பதுளை, அனுராதபுரம், இரத்தினபுரி மாவட்டங்களில் பரிசூதியப் பத்திரங்களுடன் முந்நூறு பலூன்களும் பறக்கவிடப்படவுள்ளன.

இந்தப் பரிசூதியப் பத்திரங்கள் கிடைக்கப்பெறுவோர் அருகிலுள்ள மக்கள் வங்கியில் கொடுத்து இருநூறு ரூபாவுக்கான கணக்கு ஒன்றை ஆரம்பித்துக் கொள்ளலாம்.

## புள்ளி விபரவியலாளர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் நாடு முழுவதிலுமுள்ள புள்ளிவிபரவியலாளர் வெற்றிடங்களை நிரப்பவுள்ளது. இதற்கான தகைமைகள் மற்றும் மேலதிக தகவல்கள் வர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளன.

இவ் வெற்றிடங்களுக்கு கணிதம், புள்ளிவிபரவியல், பொருளியல், குடியியல் ஆகிய ஏதாவதொன்றில் 1-ம், 2-ம் வகுப்பு சிறப்புச் சித்தியடைந்தோர் அல்லது 1-ம் வகுப்பு சித்தியடைந்த கணித சாதாரண பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம்.


இது குறித்த வர்த்தமானி அறிவுறுத்தல் கடந்த மாதம் 7 ஆம் திகதி வெளிவந்த போதிலும் இதுவரை இவ் வர்த்தமானி யாழ் மாவட்டத்திற்கு வரவில்லை. இப்பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித்திகதி இம்மாதம் 21 ஆம் திகதி ஆகும். (சி)

### விடைத் தாள்கள் அனுப்பப்படும்

[யாழ்ப்பாணம்]

சென்ற 30ஆம் திகதி நடைபெற்ற எழுதுவினைஞர் ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சையின் விடைத்தாள்கள் மற்றும் பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்களின் விண்ணப்பப் படிவங்கள் என்பன இம்மாத முற்பகுதியில் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

## வீரச்சாவு



2 ஆம் லெப். காந்தன்

இயக்கச்சிப் பகுதியில் நேற்று முன்தினம் காலை 6.00 மணியளவில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர் மோதலில் விடுதலைப் புலிகள் போராளி 2-ம் லெப்டினன்ட் காந்தன் [சின்னையா ஆனந்தன் தும்பளை, பருத்தித் துறை] வீரச்சாவு அடைந்தார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### வரவேற்பு விழா

(யாழ்ப்பாணம்)

மன்னார் மறை மாவட்டத்தின் புதிய ஆயர் மேதகு கலாநிதி இராயப்பு யோசவ் ஆண்டகை இறுதியாகப் பங்குத் தந்தையாகப் பணி புரிந்த கண்டிக்குளி புனித ஸ்நாபகயுவானியர் பங்கு இறை மக்கள் இன்று மாலை 5 மணிக்கு அவருக்கு ஒரு வரவேற்பு விழா நடத்தவுள்ளனர்.

விழாவிற்குப் பங்குத் தந்தை வண. இம்மானுவேல் செல்வராசா தலைமை தாங்குவார்.

## இலங்கையில் கைதானோர் இந்தியாவிடம் ஒப்படைப்பு

தமிழ் நாட்டில் குற்றச் செயல்களில் ஈடுபட்டார்கள் என்று சந்தேகிக்கப்படும் இரு தமிழ் இளைஞர்களை சிறிலங்கா அரசாங்கம் தமிழக பொலிசாரிடம் ஒப்படைக்க உள்ளதென்று தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் தினத்தந்தி நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

'சார்க்' கூட்டமைப்பு நாடுகளிடையே குற்றவாளிகளை ஒப்படைப்பது சம்பந்தமாக ஒப்பந்தம் உள்ளது என்றும் அதனடிப்படையிலேயே இந்த இரு இளைஞர்களும் ஒப்படைக்கப்பட உள்ளனர் என்று அப்பத்திரிகை மேலும் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையைச் சேர்ந்த மணிக்குமார் என்ற இளைஞர் தமிழ் நாட்டுப் பொலிசாரினால் தேடப்பட்டு வருபவராம். இவர் அண்மையில் இலங்கையில் வைத்து புளொட் குழுவினரால் கைது செய்யப்பட்டு, இலங்கை இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டாராம்.

மணிக்குமாருடன் நடமாடிய நாகராஜன் என்பவரும் புளொட் குழுவினரால் கைது செய்யப்பட்டு இலங்கை இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளாராம்.

இவர்கள் இருவரையும் தமிழக பொலிசாரிடம் ஒப்படைப்பதற்கு இலங்கை இராணுவ அதிகாரி சம்மதம் தெரிவித்துள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மதுரை அருகே உள்ள சமயநல்லூர் பொலிஸ் நிலையத்தில் குற்றப்பிரிவு சப் - இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமியை கடந்த செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதி துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்தார் என்று மணிக்குமார் மீது பொலிஸ் சந்தேகிக்கிறது. இவர் மதுரை அருகேயுள்ள அகதிமுகாம் ஒன்றில் தன்னை அகதியாகப் பதிவு செய்திருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. (தி)

### தொடர்ந்து பறந்த விமானங்கள்

யாழ் குடாநாட்டில் வலிகாமம் மற்றும் தென்மராட்சி பகுதிகளில் சிறிலங்கா விமானப்படையினரின் விமானங்கள் மற்றும் உலங்கு வானூர்திகளின் நடமாட்டம் நேற்று அதிகரித்து காணப்பட்டன.

## விசேட பரீட்சை முடிவினை விரைவில் பெற முயற்சி

1991 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் நடாத்தப்பட்ட 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் விசேட பரீட்சையின் முடிவுகளை விரைவில் பெற யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் முயற்சி மேற்கொண்டுள்ளார்.

மேற்படி பரீட்சை நடைபெற்ற சில பரீட்சை நிலையங்களின் பரீட்சை மேற்பார்வையாளர்கள் சரியான முறையில் பரீட்சார்த்திகளின் பெயர்ப் பட்டியல்களை இணைத்து பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்காமையினால் மேற்படி பெறுபேறு தாமதமாகுவதாகவும் இதனை சரி செய்து தவறவிட்ட பெயர்ப் பட்டியல்களை இம்மாத முற்பகுதியில் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் இதேபோன்ற தவறுகள் மேற்படி விசேட பரீட்சை நடைபெற்ற ஏனைய மாவட்டங்களிலும் நடைபெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (பா)

## நுண்கலைமன்ற பரீட்சை மாத இறுதியில் ஆரம்பம்

வட இலங்கை நுண்கலை மன்ற பரீட்சைகள் இம்மாதமும் எதிர்வரும் மே மாதமும் நடைபெறவுள்ளதாகவும் இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் மற்றும் நேர சூசிகைகள் என்பன இம்மாதம் 15-ம் திகதி அளவில் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் மேற்படி சங்கீத தலைவரும் யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளருமான இ. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதன்படி இம்மாதம் 20-ம், 21-ம் திகதிகளில் ஆசிரியர் தரப் பரீட்சைகளும் தொடர்ந்து 27-ம், 28-ம் திகதிகளிலும், மே மாதம் 1-ம் திகதியும், 1-ம், 2-ம், 3-ம், 4-ம் ஆசிரியர் தர பரீட்சைகளும் நடைபெறவுள்ளன.

மேலும் இம்முறை இப்பரீட்சைக்கு அதிக மாணவர்கள் தோற்றுவதனால் யாழ்ப்பாணம், மருதனார்மடம், கோப்பாய், நெல்லியடி ஆகிய இடங்களில் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டிருப்பதாகவும் அறியவருகின்றது. மேலும் 4-ம், 5-ம் தரங்களுக்கான பரீட்சை நிலையங்கள் யாழ்ப்பாணத்தில் மட்டுமே அமைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (பா)

## மாதகலில் வீரச்சாவு



கப்டன் செழியன் [மாரத்]



லெப். இறைஞன் (சுலைச்சன்)



லெப். தேனமுதன் (காளிதாஸ்)



லெப். நெடுமாறன் (சாந்தன்)



2ம் லெப்டினன்ட் மதிச்செல்வன் (லெனின்)



2ம், லெப்டினன்ட் தங்கவேல் (ராமு)

## மரண அறிவித்தல்கள்

### அருள்பிரகாசம் இரவிகரன்

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த செல்வன் அருள்பிரகாசம் இரவிகரன் அவுஸ்திரேலியாவில் விபத்தில் அகால மரணமானார். இவர் இளைப்பாறிய யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார அத்தியட்சகர் (S. H. S) Dr இராசரெத்தினம் அருள்பிரகாசம் வள்ளியம்மை தம்பதியின் அன்பு மகனும், பிரபாகரன் (அமெரிக்கா), முரளீதரன், தயாபரன் (அமெரிக்கா), கிருபாசக்தி, ஜெயேந்திரன், சண்முகராஜ் ஆகியோரின் சகோதரனும், Dr. சுவர்க்கலோகநாதனின் (றாகம ஆஸ்பத்திரி) மைத்துனருமாவார். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

''குகஸ்தான்''
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (4212)

தகவல்:
Dr. அருள்பிரகாசம்
(தந்தை)

### 2-ம் லெப். தங்கவேல் (ராமு)
### மு. தனபாலசிங்கம் (கணேஷ்)

ஹற்றனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், வண்ணார்பண்ணை 54, சீனியர் லேன் கலட்டியை வசிப்பிடமாகக் கொண்டவருமான முருகேசு தனபாலசிங்கம் 02 - 02 - 93 நேற்று வீரமரணம் அடைந்துள்ளார்

இவர் காலஞ்சென்ற திரு. மகேந்திரன் - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனாவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

54, சீனியர் லேன்,
கலட்டி அம்மன் கோயில்வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
கா. ஜோதிநாதன்
(4213)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 03ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.